DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDL. DIST. & SESSIONS JUDGE, MADURAI

**S.C. 512/2019 P.W.1**

DEPOSITION OF WITNESS FOR: PROSECUTION DEFENCE COURT

NAME : திரு.முருகேசன்

FATHER NAME : கருப்பசாமி

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE : 61

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.08.2026.**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

**நான் தற்போது மதுரை, தெப்பக்குளம் பகுதியில் குடியிருக்கிறேன். நான் உடல் நிலை சரியில்லாததால் வீட்டில்தான் உள்ளேன். வேறு வேலைக்கு**

செல்லமுடியவில்லை. இறந்து போன மோகன்ராஜா எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. நான் அவர்களைப் பார்த்ததில்லை. 30.04.2019 ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தபோது இரவு 12.00 மணிக்கு மதிச்சியம் காவல் நிலையத்திலிருந்து போலிசார் எனக்கு போன் செய்து, மதுரை, அண்ணாபேருந்து நிலையத்திற்கு பின்புறமுள்ள, ஆசாத்து தெருவில் எனது மகன் உயிரற்ற நிலையில் கிடந்ததாகவும் அவருடைய சட்டைப்பையில் இருந்து போனை எடுத்து அதில் அப்பா என்று இருந்த எனது போனிற்கு போன் செய்ததாகவும் சொன்னார்கள். நானும், எனது மனைவி விஜயலட்சுமியும் உடனடியாக அங்கு சென்று பார்த்தோம். எனது மகன் இறந்து கிடந்தார். அவர் இறந்த நிலையில் மின் கம்பத்தில் சாய்த்து வைக்கப்பட்ட நிலையில் இருந்தார். பின்பு என் மகனின் உடலை மதுரை, இராசாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். முதலில் நாங்கள் புகார் கொடுக்கவில்லை. பின்பு மறுநாள் போலிசார் சிசிடிவி கேமாரா பதிவில் பார்த்ததாகவும் எனதுமகன் கழுத்து இறுக்கப்பட்டு,கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். அந்த பதிவினை காண்பிக்கும்படி கேட்டபோது, போலிசார் அதனை காண்பிக்கவில்லை, விளையாட்டு வாக்கில் துண்டைப்போட்டு கழுத்தை இறுக்கியுள்ளதாக தெரிவித்தனர். பின்பு எங்களை தான் குற்றவாளிபோல் நடத்தினார்கள். நாங்கள் புகார் கொடுக்கவில்லை. மறுநாள் நாங்கள் நீதிமன்றத்திற்கு போலிசார் வரச்சொல்லி நீதிமன்றத்திற்கு வந்தோம். அங்கு நான்கு நபர்கள் கொலை செய்ததாக புகைப்படத்தை காண்பித்தார்கள். அதில்

ஒருவர் இறந்துவிட்டதாகவும், மூன்று பேர் இருப்பதாகவும் அவர்களை தெரியுமா என்றும் கேட்டார்கள். அவர்களை தெரியாது என்று சொன்னேன். என்னிடம் கையெழுத்து வாங்கிக்கொண்டு போகச்சொன்னார்கள். அவ்வாறு இரண்டு முறை என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். இந்தக் கையெழுத்தினை நீதிமன்றத்தில் வைத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள். எனது மகன் சிவப்பு கலர் டிரஸ் அணிந்திருந்தார், சரியாக ஞாபகமில்லை. ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தார். அதைப்பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் சிவப்பு கலர் சட்டைதான் என் மகன் அணிந்திருந்தது ஆகும். அது **அ.சா.பொ. 1** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் நீல நிற ஜீன்ஸ் பேண்ட்தான் என் மகன் அணிந்திருந்தது ஆகும். அது **அ.சா.பொ.2** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் பனியன்தான் என் மகன் அணிந்திருந்த உள்ளாடை ஆகும். அது **அ.சா.பொ.3** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஜட்டிதான் என் மகன் அணிந்திருந்த உள்ளாடை ஆகும். அது **அ.சா.பொ.4** ஆகும்.

**அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் போலிசார் விசாரணையில் எனது மகன் இறந்த அன்று இறப்பிற்கு முன்பு இரவு சுமார் 08.30 மணியேபோல் அண்ணா பேருந்து நிலையம் அருகிலுள்ள நவீன் பிராந்தி கடையில் மது அருந்தியதாக தெரிந்து அங்கு நான் சென்று விசாரித்தேன் என்றும் அங்கு சப்ளையராக இருந்த திருப்புவனம், பசியபுரம் கண்ணன் மற்றும் திருப்புவனம், கொத்தன்குளம் செந்தில்குமார் ஆகியோரிடம் நான் விசாரித்தபோது எனது மகனுடன் அவனது நண்பர்களான எதிரிகளான ஜெயபிரகாஷ், லோகநாதன், அருண்குமார், இராஜு ஆகியோர்கள் என் மகனைக் கூட்டி வந்து பாரில் உட்கார்ந்து பிராந்தி மற்றும் பீர் வாங்கி ஐந்து பேர்களும் குடித்துக் கொண்டிருந்ததாகவும்அவர்களுக்கு தாங்கள் இருவரும் சப்ளை செய்து கொண்டிருந்ததாகவும் சிறிது நேரத்தில் அவர்களுக்குள் வாய்த்தகராறு ஏற்பட்டதாகவும் அவர்களைப் பார்த்து தாங்கள் அவர்களை வெளியே போகச்சொன்னதாகவும் அருண்குமாரும், இராஜுவும் எனது மகனை தோளில் கைபோட்டு பாருக்கு வெளியேஅழைத்துச் சென்றதகாவும் என்னிடம் கூறினார்கள் என்றும் அதன் பின் என் மகன் இறந்து கிடந்த சம்பவம் அக்கம்பக்கம்இருந்த அருண்குமார், அங்கு செக்யூரிட்டிகளாக வேலை செய்து வந்த சுப்பையா மற்றும் கருப்பையா ஆகியோர்களை விசாரித்தேன் என்றும் அவர்கள் என்னிடம் எனது மகனிடம் பாரில் தகராறு செய்த எதிரிகளான ஜெயபிரகாஷ், லோகநாதன்,அருண்குமார், இராஜு ஆகியோர்கள் சேர்ந்து எதிரி லோகநாதன் எனது மகனின் கழுத்தில் துண்டைப்போட்டு இறுக்கியதாகவும்

ஜெயபிரகாஷ் எனது மகனின் நாடியைப் பிடித்து பின்நோக்கி தள்ளியதாகவும் அருண்குமார் மற்றும் இராஜு ஆகியோர்கள் கைகளால் எனது மகனின் முகம் மற்றும் நெஞ்சில் தாக்கியதாகவும் அதனைப் பார்த்த அருண்குமார் மற்றும் செக்யூரிட்டிகளாக வேலை பார்த்த சுப்பையா மற்றும் கருப்பையா ஆகியோர்கள் எதிரிகளை சத்தம் போட்டு விரட்டிவிட்டு சென்றுவிட்டதாகவும் அதன்பின் எனது மகன் கிரிதரன் என்பவரது வீட்டின் அருகே பேச்சு மூச்சற்ற நிலையில் கிடந்ததாக தெரிவித்தார்கள் என்றும் எனது மகனை மேற்படி எதிரிகள் தாக்கியதால்தான் எனது மகன் இறந்துள்ளார் என்று நான் தெரிந்து கொண்டதாகவும் அன்று போன்மூலம் தகவல் சொன்னது செல்வராஜ் என்று பதற்றத்தில் சொல்லிவிட்டதாகவும் என்னிடம் போனில் அன்றைய தினம் பேசியது பாரில் காசாளராக வேலை செய்யும் இராஜாமணி என்று தெரிந்து கொண்டேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனது மகன் இறந்த இடத்தை நான் சென்று பார்த்தபோது போலிசாரும் மற்ற நபர்களும் இருந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.4 வரையிலான ஆடைகள் எனது மகன் அணிந்திருந்தவைதான். என்னிடம்

காண்பிக்கப்படும் பச்சை நிற துண்டு என் மகனின் உடலில் இருந்தது என்றால் சரிதான். என்னிடம் பெயர் விபரங்கள் கேட்டு அந்த இடத்தில் போலிசார் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை. மறுநாள் மார்ச்சுவரியில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

**3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் 2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை தங்களுடையதாக பாவித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

M
UDHAYAVELAVAN

Digitally signed by
M
UDHAYAVELAVAN
Date: 2026.08.17
17:18:47 +0530

நான்காவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.